<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

OS. No. 178/2019 Date: 19.03.2024

PW1- ராஜி

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

பிரதிவாதியை தாவாவிற்கு முன்பு சுமார் 3 வருடங்களாக எனக்கு தெரியும். பிரதிவாதியின் ஊர் குண்டுக்காடு. என்னுடைய ஊர் மோட்டுப்பட்டி காட்டுவளவு. சேட்டுமாரியப்பன் என்பவர் மூலம் பிரதிவாதி எனக்கு பழக்கம் ஆனார். சேட்டுமாரியப்பன் தற்போதும் என்னுடன் வேலை செய்கிறார். நான் பிரதிவாதிக்கு ஒரே தவணையாக ரூ.1,50,000 கொடுத்தேன். எனக்கு பணம் வரும்போது திருப்பி கொடுத்துவிடுவதாக சொல்லி கடன் கேட்டார். மாத வட்டி ரூ.2 என்று பேசினோம். வா.சா.ஆ-1 ஐ மாரியப்பன் என்பவர் எழுதினார். மாரியப்பனும் சேட்டும் என் வீட்டிற்கு வந்து எழுதினார்கள். அப்போது பிரதிவாதியும் இருந்தார். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அரசிராமணி கார்த்திக் என்பவரை எனக்கு தெரியாது. இ.ம.எண்.2/19 மனுவில் நான் சொல்லியுள்ள சொத்தின் விவரத்தை பிரதிவாதிதான் எனக்கு சொன்னார். நான் கார்த்தி என்பவர் மூலம் தான் அந்த சொத்து விவரத்தை வாங்கினேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் முதலில் மகாலிங்கம் தான் கடன் வாங்கினார். அந்த மகாலிங்கம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு நான் தாவா கடன் கொடுத்த போது மகாலிங்கம் உடன் வரவில்லை. இருவரும் என்னிடம் தனித்தனியாகத்தான் வரவு செலவு செய்தார்கள். இருவரும் ஒருவருக்கொருவர் தெரியாமல் தான் கடன் வாங்கினார்கள் என்றால் இருவருக்கும் தெரியும். மகாலிங்கத்திற்கு ஒரு மகன் ஒரு மகள் உள்ளனர். குடும்ப செலவிற்காகத்தான் இருவரும் கடன் வாங்கினார்கள். பிரதிவாதியும், அவரது கணவரும் என்னிடம் கடன் வாங்கியதில்லை என்றால் சரியல்ல. அவர்கள் தனித்தனியாக கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. அவர்களுக்கு கடன் வாங்க வேண்டிய அவசியம் இருந்திருந்தால் இருவரும் சேர்ந்தே கடன் வாங்கியிருப்பார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதியும் அவரது கணவரும் இரண்டு மாத இடைவெளியில் என்னிடம் கடன் வாங்கினார்கள். பிரதிவாதிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. அவர் என்னை பார்த்ததே இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு பின்னர் பிரதிவாதி என்மீது போலிஸ் புகார் கொடுத்து போலிசார் என்னை அழைத்து விசரித்தார்கள் என்றால் சரிதான். விசாரணையில் என்னை

நீதிமன்றதில் பார்த்து கொள்ளும்படி சொல்லி அனுபிவிட்டார்கள். புகாரில் நான் கடன் கொடுத்தாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியிருந்தார்கள். வா.சாஆ 1 ஐ பிரதிவாதி எனக்கு எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதைநான் வேண்டப்படட்வர்கள் உதவியுடன் பொய்யாக உற்பத்தி செய்துகொண்டேன் என்றால் சரியல்ல.

Sd/-ராஜி,

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.